**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.03
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் சூழலியல் சிந்தனைகள்

**முனைவர் பா.அருள் ஜோதி,** உதவிப்பேராசிரியை தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர் Email: aruljothi@vvvcollege.org

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

சூழல் என்பது தாவரங்கள், விலங்குகள் அடங்கிய அனைத்து உயிரினங்களுடன், அவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கும் அனைத்து இயற்பியல் கூறுகளையும் அடக்கியதாகும். இவைகளுக்கு இடையே தொடர்புகள், பரிமாற்றங்கள் அல்லது இடைவினைகள் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பற்றி கற்றுக்கொள்ளுவதே சூழலியல் ஆகும்.சங்ககால மக்களும் மன்னர்களும் இயற்கையோடு இணைந்து வாழ்ந்துள்ளனர்.சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை கொண்டு விளங்கினர் என்பது குறித்து ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

**தொல்காப்பியத்தில் சூழலியல்**

'சூழலியல்' என்று பல்வேறு வல்லுநர்களாலும் வகைப்படுத்திக் கூறப்படுகின்ற யாவற்றையும் பண்டைத் தமிழன் முதற்பொருள், கருப்பொருள் என்ற இருநிலைகளில் வகுத்துக்கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய சூழலியல் வல்லுநர்கள் நிலப்பரப்பு, நீர்ப்பரப்பு அவற்றை ஆதாரமாகக்கொண்ட இயற்கை, அவற்றைச் சார்ந்து வாழ்கின்ற உயிரினங்கள், காலநிலை,அதன் இயக்கம், அதில் ஏற்படுகின்ற பாதிப்புகள், அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் ஆகியவற்றையே 'சூழலியல்' என்னும் சொல்லாட்சியில் முன்வைக்கின்றனர். இதனை ஈராயிரம் ஆண்டுகட்குமுன் நிலமும் காலநிலையும் அடங்கிய முதற்பொருளாகவும், உயிரினங்களைப் பற்றிக் கூறும் கருப்பொருளாகவும் கூறியிருக்கின்றான் தமிழன். உணவு, விலங்கு, பறவை, தொழில் போன்றவை சூழலியலில் பெரிதும் பேசப்படுகின்ற அடிப்படையான தன்மைகளாகும். இதனை,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தியாழின்பகுதியொடு...."தொல்-அகத்திணையியல்.நூற்பா. 20

எனும் தொல்காப்பிய நூற்பாவோடு பொருத்திப் பார்ப்போமானால் தற்காலச் சூழலியலின் அடிப்படை தன்மைகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருப்பது விளங்கும்.

**சூழல் பேணிய தமிழன்**

தற்காலத்து மனிதன் தன் பேராசையால் உற்பத்திப் பெருக்கத்தினை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இயற்கையை வரையறையின்றிச் சுரண்டியதன் விளைவாக இயற்கைச் சூழலில் அமைந்த உயிர்ப்பன்மயப் பரவலில் (biodiversity) இடம்பெற்றிருந்த பல சிற்றினங்களை இல்லாமற் செய்துவிட்டான். பல்வேறு உயிரினங்களின் வாழிடங்களின் மீது மனிதன் செலுத்திய ஆதிக்கம், தன் வசதிக்காக ஏற்படுத்திய சூழலியல் எதிர்ச்செயல்பாடுகள் பிற உயிரின அழிவிற்குக் காரணமாக அமைந்தன. பிற உயிர்களுக்குப் பிரச்சனை எனும் பொழுது அதுபற்றிய கருத்தே இல்லாமல் மேன்மேலும் சூழலுடன் மோதிய மனிதன் தன்னினத்ததிற்கே தனது செயல்பாடு குந்தகம் விளைவிக்கிறது எனும் நிலையில்தான் சூழலியல் பற்றிய கவனிப்புதேவை என்பதை உணர்ந்துள்ளான். ஆனால் பண்டைத் தமிழன் எக்காலத்திலும் தனது சூழலுக்கு எதிரானவனாய் அமையவில்லை மாறாகத் தன் சூழலைப் பேணவே செய்துள்ளான். வினை முடித்து தலைவியைக்காணத் தேரில் விரைந்து வரும் தலைவன் தன் வேட்கையாற் பிறந்த வேகத்தினிடையேயும் கடற்கரை நண்டுகள் தேர்க்காலில் சிக்கி வருந்தாவண்ணம் காக்கும் தன்மையை,

“புணரி பொருத பூமண லடைகரை
யாழிமருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பாய்ந் தூர” நற்றிணை. பா.எ. 11

எனும் பாடலடிகள் காட்டுகின்றன. அறுவடைக் காலத்தில் தனது வயலில் உறையும் சிறுபறவைகள் பாதுகாக்கப்படவேண்டும் எனும் உணர்வுடன் அறுவடைக்கு முன்பே அவற்றை வெளியேற்ற வேண்டி தண்ணுமை என்னும் பறையறைந்து அவற்றைத் தன் வயலிலிருந்து வெளியேற்றிய பின்பே அறுவடையைத் தொடங்கினர். பண்டைத் தமிழர். தண்ணுமையோசை கேட்டுப் பயந்த பறவைகள் வேறு பாதுகாப்பான இடம் சென்றுரைந்தன.இதனை,

“வெண்ணெல் லரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்...”
“அறைக்கரும்பி னரிநெல்லின்
இனக் களமர் இசைபெருக” பொருந.அடி. 193. 194

எனும் சங்கப்பாடலடிகள் உணர்த்தும். இவை உயிர்ப்பன்மையப் பரவலாகிய தன் சூழலில் வாழும் பல்லுயிரிகளையப் பேணும் சிந்தனை தமிழனிடத்தில் இருந்தமையைக் காட்டுகின்றன.

**.மரங்களை அழித்தல்**

சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய பாதுகாவலனாக விளங்கிய மரங்களை வெட்டுவது அறமற்ற செயலாக கருதினர். தான் பயனடைய வேண்டி உயிர்காக்கும் மருந்துப் பொருளாகப் பயன்படுத்தும்

பொழுதிலும் மரத்தினை அழிக்காது பாதுகாத்துப் பேணவேண்டும் என்ற உயரிய சிந்தனை பண்டைத் தமிழனிடம் இருந்ததை,

"மரஞ்சாம் மருந்துங் கொள்ளார் மாந்தர்"

எனும் நற்றிணை அடி விளக்குகிறது. இது மனித சமுதாயத்தில் 'மரத்தைக் கொன்று மருந்து கொள்ளார் உலகோர்' எனும் நீதி நிலவியதைக் கூறுவதாக அமைந்துள்ளது. சுயநல நோக்கில் மரங்களை முடிந்தவரை அழித்துவிட்டு உலக வெப்பமயமாதலுக்கும் மழையின்மைக்கும் வருந்தும் தற்கால மனிதனுக்கு முன்னர் இயற்கைபேணிய பண்டைத் தமிழன் உயர்ந்து நிற்கின்றான்.

மரங்களில் தெய்வமுறைவதாகக் கருதி மரத்தை வழிபட்டனர். இதை "கடவுள் முது மரத்து" என்கிறது(நற்-83-3) மரங்களின் சிறப்பினைக் கருதி அவற்றை வெட்டக்கூடாது எனும் சூழலியல் அறிவு படைத்தவர்களாகத் தமிழர்கள் விளங்கியுள்ளனர்.

பாரி பறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின் அம்புகை அயலது
சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும் (புறம்.108:1-3)

என்று வரும் பாடலடிகளால் சந்தன மரம் எரிக்கப்பட்டமையும் அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கின்றோம்.

மற்றொரு புறப்பாடலில், களிறே, எழுவந் தாங்கிய கதவம் மலைந்து (புறம்.97:8) என்ற வரியால் கோட்டைக்கு அமைந்த பெருங்கதவுகளின் வலிமையை உணர்த்தும் செய்தியினால் கதவுகள் செய்ய மரங்கள் அழிக்கப்பட்டமை பெறப்படுகிறது. இது போன்று தேர்கள், வண்டிகள், அச்சுகள் போன்ற பல பொருட்கள் செய்வதற்கும் மரங்களே பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

மக்களின் வாகனப் பயன்பாட்டிற்குத் தேர்கள் அதிகமாகப் பயன்பாட்டில் இருந்த குறிப்பினை,

"வைகல் எண்தேர் செய்யும் தச்சன்'' (புறம்.87:3)

எனும் பாடலடி தருகிறது.

கால்நடைகளின் உணவுக்காக மகளிர் இலைகளைக் கொய்து தருவதனை,

"அருவி மாறி அஞ்சுவரக் கருகிப்
பெருவறம் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த அயத்துப் பூவுடன் உதிரக்
கொய்து கட்டு அழித்த வேங்கையின்
மெல்லிய மகளிரும் இழை கழைந்தனரே'' (புறம்,225:12-16)

என்ற பாடலடிகள் இயம்புகின்றன. வேனிற்காலத்தே புல்லின்றி நிலம் காணப்பட கால்நடைகளுக்கு வேங்கை மரத்தின் இலைகளைத் தழைகளாக பயன்படுத்தப்பட்ட பாங்கு கூறப்படுகிறது.

படையெடுத்துச் செல்லும் மன்னர்கள் பகைநாட்டின் காவற் காட்டினையும் காவற்மரங்களையும் வெட்டி அழித்த செய்தியினைப் புறப்பாடல்களான புறநானூறும் பதிற்றுப்பத்தும் பரக்கப் பேசுகின்றன.

சோழன் பெருநற்கிள்ளி தன் பகைநாட்டு அரண்மனைகளில் வளர்க்கப்பட்ட மரங்களை விறகுகளாகப் பயன்படுத்தினான் என்பதை,

“விளை வயல் கவர் பூட்டி
மனை மரம் விறகு ஆக’’ (புறம்.16:4-5)

என்ற பாடலடிகளால் அறிகின்றோம். பகை நாட்டினர் ஒரு நாட்டின் வளமையைக் கெடுக்க பகையுணர்வு கொண்டு மருத நிலங்களையும்,காடுகளையும் தீயிட்டு எரித்துள்ளனர். செயல்பொருள் பயன்பாட்டுக்கும் போக்குவரத்துக்குப் பாதை வேண்டியும் தாவரங்களும் அழிக்கப்பட்டதை சங்க இலக்கியங்களான புறநானூறும் பட்டினப்பாலையும், பதித்துப்பற்றும் சில பாடல்களில் பறைசாற்றுகின்றன.

நிலம் உருட்டிய நேமியோரும்
சமங் கண் கூடித்தாம் வேட்பவ்வே
…..
பேர் அமர் உழந்த வெருவரு பறந்தலை
விழு நவி பாய்ந்த மரத்தின்
வாள் மிசைக் கிடந்த ஆண்மையோன் திறத்தே'
(புறம். 270--12)

என தாவரங்களை அழித்தால் அடையும் தீமையை சங்கப் புலவர்கள் உணர்திருந்தினர்.

ஓரறிவு படைத்த தாவரம் முதல் ஐந்தறிவு படைத்த ஆவினங்கள் வரை தேவையை ஆய்ந்தறிந்து சுற்றுச்சூழலுக்கு எவ்விதப் பாதிப்பும் வராமல் எழுத்தறிவு அதிகம் இல்லாத அந்தக் காலத்தில் சங்ககால மக்கள்; செம்மாந்த வாழ்வு வாழ்ந்துள்ளனர்.

**குறிப்புதவி நூல்கள்;**

[1]. பரிமளம் நற்றிணையில் சூழலில் பன்னாட்டு தமிழில் ஆய்வுகள் தொகுதி 3 இதழ் 4 அக்டோபர் 2023

[2]. சங்க இலக்கியம் கு.வெ.பாலசுப்பிரமணியன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை